# கொலொன்ன பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 07 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கொலொன்ன பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொலன்ன பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின்போது களஞ்சியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 617,257 செலவிடப்பட்டபோதும், இப் பெறுமதி பேரேட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்கான செலவினம் செலவினத் தலைப்புக்களுக்கேற்ப குறிப்பிடப்படவுமில்லை.

(ஆ) பதினொரு கணக்கீட்டு விடயங்களுக்குரிய பேரேட்டுக் கணக்கு மீதிக் கூட்டுத் தொகை ரூபா 2,900,996 ஆகும். உப பதிவேடுகளின் பிரகாரம் கூட்டுத்தொகை

ரூபா 1,817,077 ஆகும். இவ்வித்தியாசத்திற்கான காரணம் அறியப்பட்டு பேரேட்டுக் கணக்கில் சீராக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8,831,503 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருகுஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,234,240 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருகுஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,850,151 ஆகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் தோற்றுவாய் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | குத்தகை வாடகை | 535 | 560 | 07 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 172 | 183 | 02 |
| (iii) | பிற வருவாய் | 5420 | 2117 | 49 |

**2.2.2 நீர்க்கட்டணம்**

(அ) கொலொன்ன நீர்ச் செயற்திட்டத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான நுகர்வோர் எண்ணிக்கை 112 ஆகும். ஒரு நபரிடமிருந்து மாதாந்தம் ரூபா 100 வீதப்படி ஒரு வருடத்திற்கான மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபா 134,300 ஆகும். எனினும், ரூபா 87,200 வருவாய்க்கான விலைப்பட்டியலே சமர்ப்பிக்கப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 47,100 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) கொலொன்ன நீர்ச்செயற்திட்டத்தின் மொத்தப் பாவனையாளர் 94 ஆகும். மின்மானி வாசிப்பதற்கான கட்டணம் நீங்கலாக மாதாந்தக் கட்டணப்படி அறவிடப்பட வேண்டிய ஆண்டிற்கான தொகை ரூபா 229,200 ஆகும். செயற்திட்டத்தின் ஆண்டிற்கான விலைப்பட்டியல் ரூபா 152,720 ஆக அமைந்ததால் ஆண்டிற்கான வருவாய்க்குச் சரிவர விலைப்பட்டியல் கணிப்பிலிடப்படவில்லை எனப் புலனாகியது.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 916,125 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,166,160 |

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்